**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 22** **நாள்: 25.02.2017**

## பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில், சென்னை தியாகராய நகரில் நடைபாதை வளாகம் அமைக்கும் பணிக்கான இரண்டாம் ஒத்திகை நடைபெற்றது.

சென்னையில் தியாகராய நகர் முக்கியமான வணிக மையமாக திகழ்கிறது. எனவே, தியாகராய நகரினை மறுசீரமைப்பு மேற்கொள்வதற்காக திருவாளர்கள் JLL கலந்தறிதற்குரியவர்கள் மூலம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வின் போது தியாகராய நகரில் நடைபாதை வளாகம் அமைப்பது ஒரு முக்கிய அம்சமாக அறியப்பட்டது. நியூயார்க் நகரத்தின் டைம்ஸ் சதுக்கம் (Times Square) என்னும் இடத்தில் அமைந்துள்ள நடைபாதை வளாகம் போன்று தியாகராய சாலையில் நடைபாதை வளாகம் அமைத்திட முடிவு செய்யப்பட்டது. தற்பொழுது, வரைபடம், மதிப்பீடு மற்றும் ஆவணங்களை தயாரிக்க கலந்துரைஞர் (Consultant) நியமிக்கப்பட்டு ஆய்வு நடைபெறுகிறது.

பொலிவு நகர (Smart City) திட்டத்தின் கீழ் சென்னையும் ஒரு நகரமாக தேர்வு செய்யப்பட்டது. இத்திட்டமானது ரூ.1366 கோடி மதிப்பீட்டில் சென்னை முழுவதும் நடைபெறவுள்ளது. பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கூறாக சென்னையின் முக்கிய பகுதியான தியாகராய நகர் தேர்வு செய்யப்பட்டு, தியாகராய சாலை (பாண்டி பஜார்)ல் நடைபாதை வளாகம் அமைக்க தோராயமாக ரூ.50 முதல் 55 கோடி மதிப்பீட்டில் இத்திட்டம் நிறைவேற்றப்பட உள்ளது.

தியாகராய சாலை (பாண்டி பஜார்)ல் நடைபாதை வளாகம் (Pedestrian Plaza) அமைக்கும் பணிக்கான வடிவமைக்கும் பணி நடைபெறுகிறது. இப்பணியினை மேற்கொள்ளும் பொருட்டு சோதனை முறையில் போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டு தியாகராய சாலையில், பாஷ்யம் தெரு (பனகல் பூங்கா) முதல் தணிகாசலம் தெரு சந்திப்பு வரை 20.11.2016 (ஞாயிற்றுக்கிழமை) அன்று முதல் ஒத்திகை நிகழ்ச்சி காலை 9.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை நடைபெற்றது.

அதன் தொடர்ச்சியாக இரண்டாவது ஒத்திகை இன்று (25.02.2017) காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், துணை ஆணையர் (கல்வி) திரு.எம்.கோவிந்தராவ் இ.ஆ.ப., அவர்கள், மத்திய வட்டார துணை ஆணையர்

டாக்டர்.சுபோத் குமார் இ.ஆ.ப., அவர்கள், போக்குவரத்து காவல்துறை துணை ஆணையாளர் திரு.ப.அரவிந்தன் இ.கா.ப., அவர்கள் மேற்பார்வையில் நடைபெற்றது.

ஒத்திகை நிகழ்ச்சியின் போது, முன் மாதிரியாக நடைபாதை வளாக பகுதியில் பொதுமக்களை ஊக்கப்படுத்தும் விதமாக உடல் நலம் குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சியும், மருத்துவ முகாமும், பள்ளி மாணவ மாணவியர்கள் கலந்து கொண்ட பொலிவு நகரம் (Smart City) பற்றிய ஓவியப் போட்டியும், சிறுவர்கள் மற்றும் அனைத்து தர மக்களும் பங்கேற்ற பிற விளையாட்டு போட்டிகளும், யோகா பயிற்சி, உயிர் காக்கும் முதலுதவிக்கான செய்முறை விளக்கம் மற்றும் இசை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது.

தியாகராய நகர் நடைபாதை வளாகத்தில் அமைந்துள்ள வணிக நிறுவனங்களுக்கு சென்று வர பேட்டரி கார்கள் ஏற்பாடு செய்யப்பட்டு, வயதானவர்கள், குழந்தைகள், கர்ப்பிணி பெண்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் சிரமமின்றி சென்று வந்தனர்.

பொதுமக்கள் நடைபாதை வளாகம் குறித்து வரவேற்பினையும், மகிழ்ச்சியினையும் தெரிவித்தனர். தியாகராய நகர் போன்ற போக்குவரத்து நெரிசல் மிகுந்த இடங்களில் இதுபோன்ற திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் குடும்பத்துடன் இவ்விடத்திற்கு வந்து எவ்வித பயமும் இன்றி பாதுகாப்புடன் பொருட்களை வாங்குவதற்கு வசதி ஏற்படும். வெளிநாடுகளில் உள்ளதை போன்று நமது மாநிலத்தில் ஏற்படுத்தப்படுவது மகிழ்ச்சிக்குரியதாகும். மேலும், அரசு இதனை செயல்படுத்திட வேண்டும் என அனைத்து தரப்பு பொதுமக்களும் கருத்து தெரிவித்தனர்.

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் மூலமாக காற்றிலுள்ள மாசு தன்மையை கண்டறிவதற்கான கருவிகள் நிறுவப்பட்டு தொடர்ச்சியாக காற்றின் தன்மை கண்காணிக்கப்பட்டது.

நைட்ரஜன் டை ஆக்ஸைடு 24.02.2017 அன்று மாலை 4.00 மணி நிலவரப்படி 83.20 மைக்ரோ கிராம் 1 கன மீட்டர் கொள்ளளவிலும், 25.02.2017 அன்று மாலை 4.00 மணி நிலவரப்படி 29.50 மைக்ரோ கிராம் 1 கன மீட்டர் கொள்ளளவிலும் இருந்தது.

காற்றில் கலந்துள்ள மாசு (நுண்துகள்களின் அளவு 10 மைக்ரான்களுக்கும் குறைவாக) 24.02.2017 அன்று 4.00 மணி நிலவரப்படி 80 மைக்ரோ கிராம் 1 கன மீட்டர் கொள்ளளவில், 25.02.2017 அன்று 4.00 மணி நிலவரப்படி 61 மைக்ரோ கிராம் 1 கன மீட்டர் கொள்ளளவிலும் இருந்தது.

இத்திட்டம் அமையும் தருணத்தில் உடல் நலத்திற்கு கேடு இல்லாத காற்றின் மாசுத்தன்மை வெகுவாக குறையும்.

இந்த நிகழ்ச்சியில் உணவகங்களின் உரிமையாளர்களும் பங்கேற்று தங்களின் உணவகத்தின் முன்பாக பொதுமக்கள் பயன்பெறும் வகையில் இருக்கைகள் அமைத்து, நடைபாதைகளில் உணவு பரிமாறியது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்ச்சியின் போது மக்களின் கருத்துகள் கேட்டு பதிவு செய்யப்பட்டது. பொதுமக்களின் கருத்துக்களின் அடிப்படையில் நடைபாதை வளாகம் அமைக்கப்படவுள்ளது.

நடைபாதை வளாகம் அமைப்பதற்கு இன்று கீழ்க்கண்ட வகையில் போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டு வடிவமைப்பு ஒத்திகை நிகழ்ச்சி நடைபெற்றது. போக்குவரத்து காவல்துறையினரால் சிறப்பான முறையில் திட்டமிடப்பட்டு, எவ்வித வாகன நெரிசலும் ஏற்படாமல் சீரான போக்குவரத்திற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

**<u>பாஷ்யம் தெரு (பனகல் பூங்காவிலிருந்து) தியாகராய சாலை ( பாண்டி பஜார்) வழியாக அண்ணா சாலைக்கு செல்லும் வாகனங்கள்</u>**

- **பேருந்துகள்** மற்றும் **இரு சக்கர வாகனங்கள்** மட்டும் இச்சாலையில் **வழக்கம் போல் சென்று வர அனுமதிக்கப்பட்டது.**
- கார், ஆட்டோ ரிக்ஷா, வேன், ஷேர் ஆட்டோ மற்றும் கனரக வாகனங்கள் மாற்றுப் பாதையாக G.N.செட்டி சாலை, டாக்டர் நாயர் சாலை வழியாக அண்ணா சாலைக்கு செல்ல அனுமதிக்கப்பட்டது.

**<u>அண்ணா சாலையிலிருந்து தியாகராய சாலை (பாண்டி பஜார்) வழியாக பாஷ்யம் தெரு செல்லும் வாகனங்கள்:</u>**

- பேருந்துகள் மற்றும் இரு சக்கர வாகனங்கள் மட்டும் இச்சாலையில் வழக்கம் போல் சென்று வர அனுமதிக்கப்பட்டது.
- கார், ஆட்டோ ரிக்ஷா, வேன், ஷேர் ஆட்டோ மற்றும் கனரக வாகனங்கள் மாற்றுப் பாதையாக தணிக்காச்சலம் தெருவிலிருந்து வெங்கடநாராயணா சாலை வழியாக பாஷ்யம் தெருவிற்கு அனுமதிக்கப்பட்டது.
- G.N.செட்டி தெரு மற்றும் வெங்கடநாராயணா சாலை வழியாக தியாகராய சாலையை கடக்கும் உட்புற சாலைகளான இராஜ மன்னார் தெரு, கமலாபாய் தெரு, முத்துக்கிருஷ்ணன் தெரு, நானா தெரு, சிவஞானம் தெரு, தீனதாயளு தெரு, சுந்தரம்

தெரு, சிவப்பிரகாசம் தெரு, கண்ணதாசன் தெரு, பகவந்தம் தெரு மற்றும் ராஜா தெரு ஆகியவற்றின் போக்குவரத்து நிறுத்தப்பட்டது.

- மேற்கண்ட பகுதியில் வசிக்கும் பொதுமக்களின் வாகனங்கள் மட்டும் உட்புற சாலைகளில் செல்ல அனுமதிக்கப்பட்டது.

**<u>வாகனங்கள் நிறுத்துமிடம் (Alternate Parking Plan):</u>**

- பாஷ்யம் தெருவிலிருந்து தியாகராய சாலை செல்லும் கார்களை பனகல் பூங்காவின் முன் உள்ள வாகன நிறுத்துமிடம் மற்றும் பிரகாசம் சாலையிலுள்ள சென்னை நடுநிலைப்பள்ளி மைதானம் ஆகிய இடங்களில் நிறுத்திட அனுமதிக்கப்பட்டது.
- அண்ணா சாலையிலிருந்து தியாகராய சாலை செல்லும் கார்கள் அண்ணா சாலை மற்றும் தணிகாச்சலம் சாலை சந்திப்பு வரை உள்ள இடங்களின் இருபுறமும் நிறுத்திட அனுமதிக்கப்பட்டது.

**<u>இருசக்கர வாகனங்கள் நிறுத்துமிடம்:</u>**

- பிரகாசம் சாலை, கோமதி நாராயணன் சாலை (G. N Chetty Road) வழியாக தியாகராய நகருக்கு வரும் வாகனங்கள் பிரகாசம் சாலையில் உள்ள சென்னை நடுநிலைப்பள்ளி மைதானத்தில் நிறுத்த அனுமதிக்கப்பட்டது.
- அண்ணாசாலை, தணிகாச்சலம் சாலை, டாக்டர் நாயர் சாலை வழியாக தியாகராய நகருக்கு வரும் வாகனங்கள் பலஅடுக்கு (Multi Level Parking) வாகனம் நிறுத்துமிடம் (இந்துஸ்தான் பெட்ரோலியம் பங்க் எதிரில்) அமையவுள்ள காலியிடத்தில் வாகனங்கள் நிறுத்த அனுமதிக்கப்பட்டது.
- போக் சாலை, டாக்டர் நாயர் சாலைக்கு இடையில் உள்ள தியாகராய சாலையோர வாகனம் நிறுத்துமிடத்தில் அனுமதிக்கப்பட்டது.

**செய்தி வெளியீடு: துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்**
**பெருநகர சென்னை மாநகராட்சி**